


Our Chezhumai is given to the Small Groups in bilingual format (English and Tamil)

எங்களது செழுமை மாத இதழ் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறுகுழுக்களுக்கு கொடுக்கப்படுகிறது



## Best practices to be learnt from this month Chezhumai

1. Using TIST Node meeting and Chezhumai newsletter effectively
2. Participate in all TIST training program
3. Planting multiple tree species
4. Using natural manure
5. Practicing intercrops regularly
6. Help farmers to join in TIST Program

## இம்மாத செழுமையில் உள்ள சிறந்த பயிற்சி முறைகள்

1. TIST–கணுக்கூட்டம் மற்றும் மாதாந்திர செழுமை இதழை நன்கு பயன்படுத்துவது.
2. TIST–பயிற்சி கூட்டங்களில் தவறாது கலந்து நன்கு பயன்படுத்துவது
3. பலவிதமான மரங்களை நடவுசெய்வது
4. இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல்
5. தவறாமல் ஊடுபயிர் செய்வது
6. TIST திட்டத்தைப் பற்றி மற்ற விவசாயிகளுக்கு எடுத்து கூறுவது

**TIST Tree Planting India Private Limited**
Flat A, Plot No.69, Sankara Nagar, 26th Street
Pammal, Chennai 600075. Mobile: 9840299822
Email: josephrexon@tist.org / Visit us at www.tist.org



On 5.6.2011 TIST and Cognizant jointly celebrated the World Environment Day along with 250 TIST farmers. Cognizant launched the tree planting program on the same day, through TIST Program Cognizant will plant one lakh trees. Lot of good activities happed during the celebration. News on the World Environment Day celebration will be published in July month Chezhumai along with pictures.

**5.6.2011** அன்று டிஜஎஸ்டி மற்றும் காக்னிசன்ட் நிறுவனம் இணைந்து உலக சுற்றுப்புற தினத்தை 250 டிஜஎஸ்டி விவசாயிகளுடன் சேர்ந்து கொண்டாடியது. இத்தினத்தன்று காக்னிசன்ட் நிறுவனம் டிஜஎஸ்டி திட்டத்தின் மூலம் 1 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யும் நற்காரியத்ததை துவக்கியது. இந்நிகழ்ச்சியில் பல நற்காரியங்கள் நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியைப்பற்றிய முழு கட்டுரை மற்றும் புகைப்படங்கள் அடுத்த மாத ஜீலை இதழில் வெளியிடப்படும்.

## Green Farm Small Group of Placepalayam Center

We belong to Green Farm Small Group, we are following the best practices of TIST Program at Placepalayam Center in Seethajeri Village. To have more number of trees in our group, we have planted trees like mango and teak all totaling to 2,598 trees. We have planted these trees in three groves, namely Arul, Arul1 and Maasi reddy.

To get additional income other than TIST tree stipend payment, the members of this group are practicing regularly short time crops as intercrops. The members of this small group happily say that TIST training programs are motivating them to plant additional trees.

## பிளேஷ்பாளையம் மையத்தைச் சேர்ந்த கீரின் ஃபார்ம் சிறுகுழு

திருவள்ளுவர் மாவட்டம் பிளேஷ்பாளையம் மையத்தில் உள்ள சீத்தஞ்ஜேரி கிராமத்தில் செயல்பட்டு வருகின்ற கீரின்ஃபார்ம் சிறு குழுவாகிய நாங்கள் TIST–ன் சிறந்த பயிற்சி முறைகளை கடைபிடித்து வருகிறோம். எங்களது குழுவில் அதிக மரங்களை நடவேண்டும் என்பதற்காக நாங்கள் மா, தேக்கு, போன்ற 2,598 மரங்கள் வைத்துள்ளோம். இதில் மொத்தம் மூன்று தோப்புகள் உள்ளன, அவை அருள், அருள்1 மற்றும் மாசிரெட்டி ஆகும்.

இக்குழு உறுப்பினர்கள் ஊக்கத்தொகைப் பெறுவதுமட்டுமல்லாது மரகன்றுகளுக்கு இடையே குறுகிய கால ஊடுபயிாகள் செய்து கூடுதல் வருமானத்தை பெறுகின்றனர். TIST-ல் நடைபெறும் பயிற்சி கூட்டங்கள் எங்களுக்கு மேலும் மரங்களை வைக்க ஆர்வப்படுத்துகிறது என்று இச்சிறுகுழு உறுப்பினர்கள் மகிழ்ச்சியாக கூறுகின்றார்கள்.



TIST Coordinator and Quantifier are auditing a nursery
TIST ஒருங்கிணைப்பாளர் மற்றும் கணக்கிட்டாளர் நாற்றுகளை தணிக்கை செய்கிறார்கள்

## Sakthi Muzhu Nila Small Group of Chetpet Center

This Small Group joined in TIST Program during 2010 end at Chetpet Center in Ettithangal Village. The members of this small group are practicing groundnut as intercrop by learning the best practices from TIST training program. They have organized drip irrigation for their tree groves and maintaining the trees in good condition. The members say that this program is helping the farmers to improve their livelihood. Also, these members are explaining about teak tree cultivation to the other members during TIST Node meetings. They are also changing the intercrops depending upon the season and making use of it effectively.

The members happily say that we have planted trees to our best efforts to save our home, country and our mother earth.

## சேத்துப்பட்டு மையத்தைச் சேர்ந்த சக்தி முழு நிலா சிறுகுழு

சேத்துப்பட்டு மையம், எட்டிதாங்கல் கிராமத்தில் சக்தி முழுநிலா சிறுகுழு 2010 ஆம்ஆண்டு இறுதியில்TIST–ல் சிறுகுழுவாக இணைந்தனர். இச்சிறு குழு உறுப்பினர்கள் TIST–ன் கணுக்கூட்டம் மற்றும் பயிற்சி கூட்டங்களில் கலந்து கொண்டு அதில் கூறியபடி வேர்கடலை ஊடுபயிராக செய்துள்ளனர். மேலும் மரகன்றுகளுக்கு சொட்டு நீர்பாசனம் செய்து செடியின் வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்க ஏற்பாடு செய்துள்ளனர். இவை விவசாயிகளின் தரத்தை மேலும் உயர்த்த வழிவகைசெய்கின்றது என்று உறுப்பினர்கள் கூறுகின்றார்கள். மேலும் இவ்வுறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்களுக்கு தேக்கு மர வளர்ப்பின் பயன்களை கணுக் கூட்டங்கள் முலமாக எடுத்துரைக்கின்றனர். மேலும் இவர்கள் ஊடு பயிர்கள் காலத்திற்க்கு ஏற்றாற் போல் மாற்றி அமைத்து பயன்களை பெறுகின்றார்கள்.

எங்களால் முடிந்த வரை மரக்கன்றுகளை நடவு செய்துள்ளோம், வீட்டிற்க்கும் நாட்டிற்க்கும் நம்மை காக்கும் உலகத்திற்கு நலம் சேர்ப்போம் என்று இச்சிறுகுழு உறுப்பினர்கள் மகிழ்ச்சியாக கூறுகின்றார்கள்.





Member of Sakthi Muzhu Nila small group all happy in their tree grove
சக்தி முழுநிலா சிறுகுழு உறுப்பினர் அவர்களது தோப்பில் மகிழ்ச்சியாக காணப்படுகின்றனர்

## Pachaiyamman Small Group of Vellore Center

We joined in TIST Program during August 2008 at Vellore Center, Arcot Block in Thamaraipakkam Village. We are following the best practices learnt from TIST Node meeting in our groves.

In the Guru grove we have planted kumil, sapota, teak and mango all totaling to 678 longstanding trees along with trees which would give income in short time. We have been receiving stipend money for all our live trees from TIST for last three years and we are using that money to improve our tree groves, we feel happy about this. We are planning to plant trees in our another piece of three acre land very shortly. We are also working to bring in new farmers from our village to join in TIST Program. Once in a year, we loose the soil around our trees and form ridges and furrows type, this helps in air circulation in the soil and moisture is maintained in the soil. We request other small group members to following this method to maintain their trees.

## வேலூர் மையத்தைச் சேர்ந்த பச்சையம்மன் சிறுகுழு

வேலூர் மையம் ஆற்காடு வட்டம் தாமரைப்பாக்கம் கிராமத்தில் கடந்த 2008 ஆகஸ்ட் மாதத்தில் பச்சையம்மன் சிறுகுழுவாக TIST – திட்டத்தில் இணைந்தோம் TIST- யின் கணுக் கூட்டத்தில் சொல்லப்படும் செயல் முறைகளை எங்களின் தோட்டத்தில் கடைப்பிடித்து வருகின்றோம்.

எங்கள் குழுவில் குரு என்ற தோட்டத்தில் குமிழ் தேக்கு சப்போட்டா, தேக்கு, மா, போன்ற 678 நீண்ட கால மரமும் குருகிய காலத்தில் வருமானம் தரக்கூடிய மரக்கன்றுகளை நல்ல முறையில் பராமரித்து வருகிறோம். TIST – திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக ஊக்கதொகை பெற்று அதன் முழு தொகையும் எங்கள் மரங்களுக்கே பயன்படுத்துகிறோம். இதனால் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. இன்னும் எங்கள் குழுவில் மூன்று ஏக்கர் நில பரப்பில் கூடுதலாக இன்னும் ஒரு சில மாதங்களில் மரக்கன்று வைக்கயுள்ளோம். எங்கள் கிராமத்தில் புதிய விவசாயிகள் TIST – திட்டத்தில் இணைக்க உள்ளோம். எங்கள் மரக்கன்றுகளுக்கு வருடத்திற்கு வருடம் மண்ணை உழுது மரங்களுக்கு இருபுறமும் மண்ணை கால்வாய்கள் போல் அமைப்பதால் காற்றில் தூய்மையும் மண்ணின் ஈரப்பதமும் பாதுகாக்கப்படுகிறது. இதனால் ஒவ்வொரு TIST - விவசாயிகளும் இம்முறையை பயன்படுத்துமாறு எங்கள் குழுவின் சார்பாக கேட்டுகொள்ளப்படுகிறது.




Member of Pachaiyamman small group all happy in their tree grove
சக்தி பச்சையம்மன் சிறுகுழு உறுப்பினர் அவர்களது தோப்பில் மகிழ்ச்சியாக காணப்படுகின்றனர்

## Jothi Small Group of Villupuram District

Jothi Small Group of Villupuram District is following the best practices of TIST Program by maintaining the trees using natural manure. The members of this small group say that they following the natural way for agriculture practice and they use earthworm manure for their trees. Also to protect trees from leaf worm we use ash prepared from cowdung, this natural way helps the trees from worms. We follow intercrops in between the trees which maintains the moisture in the soil.

These members are doing a good work in farming. They also participate in all TIST Node meetings, TIST Training Program and are receiving TIST stipend for all their live trees continuously.

## விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஜோதி சிறுகுழு

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி மையம் சாத்தானந்தல் கிராமத்தில் ஜோதி குழுவானது இயற்கை முறையில் TIST-ன் மூலம் மரக்கன்றுகளை சிறப்பாக வளர்த்து வருகின்றனர். சிறுக்குழு உறுப்பினர்கள் கூறுகையில், “நாங்கள் இயற்கை முறையின் மூலம் விவசாயம் செய்து வருகின்றோம். அதுமட்டுமல்லாமல் மரக்கன்றுகளுக்கு மண்புழு உரம் இடுதல், இலைகளில் பூச்சி அரிப்பு இருக்கும் நேரத்தில் அதை தடுக்க வரட்டி சாம்பல் கலந்து மரக்கன்றுகளுக்கு இடுகின்றோம். இதனால் பூச்சி அரிப்பானது தடுக்கப்படுகின்றது. அது மட்டுமல்லாது மரக்கன்றுகளுக்கு இடையே ஊடு பயிர்களை வளர்த்து மண்ணின் ஈரப்பதத்தை காத்துக் கொள்கின்றோம்.”

இவர்கள் தங்களின் விவசாய முறைகளை சிறப்பாக செய்து வருகின்றனர். இவர்கள் TIST-ன் அனைத்து கணுக்கூட்டங்கள் மற்றும் அனைத்து பயிற்சி கூட்டங்களில் தவறாது கலந்துக் கொண்டு TIST-ல் இடைவிடாது ஊக்கதொகையைப் பெற்று வருகின்றனர்.





Member of Jothi small group all happy in their tree grove
ஜோதி சிறுகுழு உறுப்பினர் அவர்களது தோப்பில் மகிழ்ச்சியாக காணப்படுகின்றனர்

**Sign the GHG agreement and take the voucher payment**

ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உடனடியாக ஊக்கதொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்

## டிஜஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஜஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.
3. டிஜஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.
4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,
5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.
6. டிஜஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).
7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஜஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.
8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.
9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஜஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.
10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.
11. டிஜஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.
12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.
13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.
14. குழுவின் அங்கத்தினர்கள் டிஜஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.
15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்லும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.